**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.376/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | **திரு. வில்லவன்கோதை** |
| Father's Name/Husband Name: | **திரு. விஸ்வநாதன்** |
| Village : | துறைமங்களம் |
| Taluk : | **பெரம்பலூர்** |
| Age : | 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூரில் வசித்து மருத்துவராக ஆக பணி செய்து வருகிறேன். அ.சா.5 என்னுடைய நண்பர். கடந்த 26.01.2019 அன்று நானும் எனது நண்பர் சதீஷ்மூர்த்தி என்பவருடன் வேப்பந்தட்டையிலிருந்து பெரம்பலூருக்கு வந்து கொண்டிந்தோம். அப்போது மாலை 5.15 மணியளவில் ஆத்தூர் ரோடு சுடுகாடு அருகே போலிசார் இரண்டு நபர்களை வைத்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அன்றைய தினத்தில் போலிசார் விசாரணை செய்த நபர்கள் ஆஜர் எதிரிகள் தான். அதில் ஒருவர் தன் பெயர் சதீஷ் என்றும் மற்றொரு நபர் வெள்ளிவேல் என்றும் சொன்னார்கள். பின்னர் எதிரிகளில் தான் 2018ம் வருடத்தில் பெரம்பலூர் புதிய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள முருகன் கோவில் அருகே ஒரு பெண்மணியிடமிருந்து 7 பவுன் செயின் மற்றும் ஒரு பவுன் செயின் ஆகியவற்றினை பறித்துச் சென்றதாக சொன்னதின்பேரில் போலிசார் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து என்னிடம் முதல் கையெழுத்தும், இரண்டாவது சதீஷ்மூர்த்தி என்பவரும் கையொப்பம் செய்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து**

**அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் போலிசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் 7 பவுன் செயின் ஒன்றும், 1 பவுன் செயின் ஒன்றும் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ5 உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான், இரண்டாவது கையெழுத்து சதீஷ்மூர்த்தி என்பவர் செய்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளில் வெள்ளிவேல் யார், சதீஷ் யார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்மன் கொடுத்து அடையாள அணிவகுப்பு ஏதேனும் நடத்தினார்களா என்றால் இல்லை. எதிரிகள் எந்த இடத்தில் பதுக்கி வைத்திருந்து செயினை எடுத்துக் கொடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எந்த போலிஸ் அதிகாரி எந்த இடத்தில் வைத்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே தயார் செய்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டுக் கொண்டதன்பேரில் நான் சாட்சியமாக கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். அ.சா.5 சதீஷ்மூர்த்தி எனது நண்பர் என்றால் சரிதான். அ.சா.1 வாசுகி எனது நண்பர் சதீஷ்மூர்த்தி வசிக்கும் அதே பகுதியில் வசித்து வருவதால் எனது நண்பன் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலமும், கைப்பற்றுதல் மகஜரும் தயார் செய்யவில்லை என்றாலும் ஏற்கனவே காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் கையொப்பமிட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.